Registered No. M.—253.

அறிவு விளக்கம்.

ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

புத்தகம்—I. | 1901 ௵ செப்டெம்பர் ௴ 10-ட. திருவனந்தபுரம். | இலக்கம்—S.

விஷயங்கள்.

திருவாவடுதுறை யாதினம் :—பத்திராதிபர்.
புத்தசமயம் :—P. V. கணபதிப் பிள்ளை B. A.
சைவ சித்தாந்த சாரம் :—S. பாலவன்ன முதலியார்.
வேமனமொழி :—விருதை—சிவஞானயோகிகள்.
உமாபதி :—P. N. சுப்பிரமணிய பிள்ளை.
உலகப்பொய் வாழ்க்கை உலகமெய் வாழ்க்கை:—K. N. சிவராஜபிள்ளை B.A.
செல்வியாள் :—A. K. கிருஷ்ணய்யங்கார்.
புத்தகக் குறிப்புகள் :—
சமாசாரக் குறிப்புகள் :—

பத்திராதிபர்.
வள்ளல். சே. சிவஞானதேசிகர்.

நாகர்கோயில் விக்டோரியா பிரஸில் பதிப்பித்து
திருவனந்தபுரத்தில் வெளியிடப்படுகின்றது.

[வருஷ சந்தா ரூ. 2.] 1901. [சஞ்சிகை அணா 4.]

போஷகர் வரவு.

	ரூ.	அ.
கனம். பரமேசுவரன் பிள்ளையவர்கள்	5	0

சந்தா வரவு.

நம்பர்.			ரூ.	அ.
232	ம. ா. ா. ஸ்ரீ.	N. சுப்பிரமணிய ஐயரவர்கள் M. A., M. B., & C. M.,	4	0
18	,,	கவிராஜ. வி. அ. நமசிவாயம் பிள்ளையவர்கள் B. A.,	2	0
23	,,	S. C. முத்துசாமிப் பிள்ளையவர்கள்	2	0
51	,,	N. சுப்பராஜு அவர்கள்	2	0
62	,,	M. வேலாயுதம் பிள்ளையவர்கள்	2	0
68	,,	K. நாராயண ஐயங்காரவர்கள்	2	0
69	,,	S. ஜடாசாமிப் பிள்ளையவர்கள்	2	0
144	,,	P. V. கணபதிப் பிள்ளையவர்கள் B. A., ...	2	0
172	,,	பூ. பத்மநாப ஆசாரியவர்கள்	2	2
190	,,	R. வெங்கடேசுவரய்யரவர்கள் B. A....	2	0
405	,,	கா. இ. நா. ம. வெ. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்	2	2
409	,,	இராமகிருஷ்ண சுக்கிலியா அவர்கள் B. A., L. T.,	2	0
411	,,	வி. பி. இராமசுவாமிப் பிள்ளையவர்கள்	2	2
188	,,	S. ஈசுவரய்யரவர்கள்	2	0

அறிவித்தல்.

கடிதம், விஷயம், மணியார்டர், பதில பத்திரிகைகள், யாவும் அடியிற் கண்ட விலாசத்திற்கே அனுப்புதல் வேண்டும்.

“ அறிவு விளக்கம ” பத்திராதிபர்,
திருவனந்தபுரம், சாலைபெசார்போஸ்டு.

குறிப்பு:—பிரசுரிக்கப்படாத விஷயங்கள் திரும்ப அனுப்பப்படமாட்டா. விஷயங்களிலுள்ள கடுஞ்சொற்களும், பிறபொருள்களும் நீக்கப்படும்.—ப-ர்.

207

அறிவு விளக்கம்.

ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

புத்தகம்—I. | 1901 ஞு செப்டெம்பர் மீ 10-உ. திருவனந்தபுரம். | இலக்கம்—8.

திருவாவடுதுறை யாதீனம்.

இவ்வாதீனத்தில் தற்காலம் பிரதம சற்குரு மூர்த்திகளாயெழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள் இவ்வாதினத்தைச் சார்ந்த பலதருமச் சொத்துக்களை "பத்து வருடம் இருபது வருடங்களுக்குப் போக்கியம் விட்டு முற்பணம் வாங்கி இப்பொழுதே வீண்செல"வு செய்துவருவதன்றி, இன்னும் பல கிராமங்கள் இவரால் 'குத்தகை பேசப்பட்டுவருகின்றன,' என்றும், 'சில கிராமங்கள் இவரால் ஒற்றி விலைகளுக் குள்ளாக்கப்பட்டன' வென்றும், 'தாய், தந்தை, சுற்றங்களை விட்டுப் பிரிந்து மடத்தாரை நம்பி வந்தடைந்த தம்பிரான்கள் சோற்றுக்குப்படும்பாடு கடவுளே யறிவர். ஆதினத்துக்குப் பிள்ளைகள் போன்ற வுரிமைபூண்ட தம்பிரான்களே சோற்றிற் கலைவார்களானல் மற்றவேழைகளுக்குச் சோறு கிடைக்குஞ் சங்கதியை வாசிப்பவர் மனமேயறியும்,' என்றும் இவ்வாறு இவர் 'கேட்பாரில்லாமையால் தம்மனம் போனபடியெல்

208

லாம் நடந்து வருகின்றார்,' என்றும், அதனால் இத் தேசிக சுவாமிகளை யிவ்வாசிரியத் தானத்தினின்றும் நீக்கி யிவரால் துர்விநியோகஞ் செய்யப்பட்ட சொத்துக்களை மீட்டி அச்சொத்துக்களுக்குரியதருமத்தைப்பரிபாலனஞ்செய்தற்பொருட்டு வழக்காடுதற்கு 'ஸ்டாம்பு, வக்கீல் பீசு,' முதலிய செலவுகளுக்காக "சைவாபிமானிகளாகிய தமிழ் நாட்டாரனைவரும் இந்தப் பெரும் புண்ணியத்திற்குப் பெரிதும் பொருளுதவி செய்து முன்னின்று இகபரசாதனமடையும்படி பிரார்த்திக்கின்றனம்,'' என்றும், (27-7-01) 'சுதேச மித்திரன்' பத்திரிகையில் "ஷெ ஆதீன சைவ சித்தாந்த கைவல்லியச் சண்முகத்தம்பிரான் முதலிய ஒன்பதின்மர்,'' என்ற கைச்சாத்துடையோரால் எழுதப்பட்டிருக்கின்றன. அன்றி இக்கருத்துப்பற்றிச் சில தமிழ்ப்பத்திரிகைகளும் கூக்குரலிடுகின்றன. இதிலுள்ள வுண்மை யெவ்வளவோ? சிறிதேனு முண்மை யில்லாமற் போகாதென்ப துணிக்கத் தக்கதே. உயர்ந்த மரபிலுதித்து உயர்ந்த செல்வாக்கு நிறைந்த இப்பண்டார சந்நிதிகள் இவ்வரலாறுகளைச் சிறிதேனும் திருச்செவி சாத்தியருளாமை யெதுபற்றியோ? தத்போத மிழந்து பரபோத சீவியராய் விளங்கும் சிவாநுபூதிச்செல்வ நிலையில் இருமாந்திருக்கு மிவர் காட்சிக்குப் புலப்படா தொழிந்தனவோ? இவர் இந்நிலையில் தம்மட்டில் ஆனந்த மனுபவித்து நிற்பினும் தகுதியன்றே. என்னெனின் இந்நிலையுடையார் தம்பொருட்டொன்றும் வேண்டாரெனினும் உலக முய்தற்பொருட்டு அறத்தொழில் தாங்கல் தகுதியாதலின் என்க. இதனால் இத்தம்பிரான்கள் கூறும் யாவு முண்மையென யாம் மதிக்கின்றோமல்லோம். இவ் வறச்செயல்களைச் செவ்வனே நடாத்துதற்கு முற்பட்ட வித் தம்பிரான் மூர்த்திகள் தம் முறவினரை விட்டு மடத்தை நம்பி மடத்திற் புகுந்ததாகவும் அவ்வாறு புகுந்தும் சோறு கிடைக்கவில்லை யென்றும் பரிதபிக்கின்ற செய்கையைக்கண்டு யார்தான் நகையாடாதொழிவர்! இவர் வேண்டியாங்கு சோறு முதலியவற்

றை யளியாத பகைமை பாராட்டி இவ்விஷயத்தை வரைந்திருத்தல் கூடுமென்றும் ஒருவாறாகித்தற் கிடமில்லாமற் போமா? ஐயகோ! இச்சோற்றை விரும்பித்தான் இம்மடத்திற் புகுந்து இவ்வேடம் பரித்தனர்போலும். நாம் இதிலிருந் தூகித் தறிதற்குரிய முக்கிய விஷயமொன்றுண்டு. அது இம்மடாதிபர் துறவின் நிலை இத்தன்மைய தேன்பதே யாம். சோறு முதலியவற்றிற்காக பரிதபிக்கின்ற இவர்க்கு இவ்வாதீனத்தில் முற்காலத்தில் பண்டார சந்நிதித்தானம் வகித்த 'உருத்திரகோடி தேசிகர், காலம்வரையும் அரிசிப் பிக்ஷை முதலியனவன்றி சந்தான பிக்ஷையே கிடையாது,' என்பது நன்கு தெரிந்திருந்தும் இவரது வேடத்திற்குரிய அவ்வுண்மை நெறியைக் கைப்பற்றி தம் பசி நோயை யொழித்து தம் துறவு நிலையைக் காப்பாற்றிக்கொள்ள வறியாத விவரோ யெடுத்த காரியத்தை நன்கு முடிக்கப் போகின்றூர். இது வியப்பினும் வியப்பே. நிற்க.

இவர் கருதியவாறு நடைபெறினும் நம் நாட்டிற்கும் நமக்கும் இவ்வாதீனத்தால் பெறக்கூடிய நன்மைகளில் சிலவற்றையேனும் பெறுதல் கூடுமோ வென்பது சந்தேகந்தான். ஆதலால் மடங்கள் யாவற்றையும் பரிபாலிக்க வேண்டிய முறைகளைப்பற்றிச் சிறிது ஆராய்வாம்.

1. பண்டார சந்நிதிகளும் தம்பிரான்களும் ஒவ்வொருநாளும் தத்தமக்குரிய கர்மாநுஷ்டானங்களை முடித்து, ஞான சாஸ்திரங்களை யோதி யோதுவித்து, சிந்தித்துத் தெளிந்து தெளிவித்து, நிஷ்டையிற் பழகி, பழக்குவித்து, அநுபூதிநிலையில்நிற்றல்வேண்டும்.

2. இம்மடங்களைச்சார்ந்த தர்மப்பொருள்களைப் பாதுகாத்தற்கும் விருத்திசெய்தற்கும் வருவாய்கொண்டு அததற்குரிய வறங்களை தற்கால நிலைக்கேற்பச் செய்வித்தற்கும் அவ்வவ் மடத்தைச் சார்ந்த சமயத்தவர்களில் தக்காரைப் பொறுக்கி யெடுத்து ஒரு ச

பை (Committee) யேற்படுத்துதல் வேண்டும்.

3. இச்சபையார் பண்டார சந்நிதிகள், தம்பிரான்கள், இவர்களை பசிக்கு காமவிச்சை விளைவிக்காதவுணவினாலும் உடற்பனிப்புக்காடையினாலும் உடற்பிணிக்கு மருந்தினாலும் ஆதரித்துக் காப்பாற்றுதல்வேண்டும்.

4. இச்சபையார் வருடத்திற்கொருமுறை யுள்ளவரவுசெலவு கணக்குகளை விவரமாய் அச்சிட்டு பகிரங்கமாய் வெளிப்படுத்தல் வேண்டும்.

5. அந்தக் கணக்கு அச்சமயத்தவர்களாற் சரி பார்க்கப்பட்டு கேட்கப்படுகிற கேள்விகளுக்குச் சபையார் உத்தரவாதம் செய்தல் வேண்டும்.

6. மடத்தைச் சார்ந்த இலௌகிகசம்பந்தமான எவ்வித வேலைகளுக்கும் அததற்குத் தக்க வேதனத்தோடு அவ்வவ் சமயத்தாரில் அததற்குத் தகுதியாகிய கிருகஸ்தர்களை நியமித்தல்வேண்டும்.

7. பண்டார சந்நிதிகளாவது, தம்பிரான்களாவது தத்தம் நிலைக்கு மாறுபட்டவர்களாய்ச் சபையாருக்குப் புலப்படும்பக்ஷத்தில் அவ்வபிப்பிராயத்தை அச்சிட்டு வெளியிட்டு சமயத்தார் மிக்கோரபிப்பிராயத்தைச் சார்ந்து அவரை நீக்கிவிடும்படியான வதிகாரமிச்சபையாருக்கு இருத்தல் வேண்டும்.

இக்காரியத்தில் இன்னும் ஆவசிகமான திருத்தங்கள் பெரும்பாலும் இனிக்கூட்டுவிக்கவேண்டுமென்று நாம் அபிப்பிராயப் பட்ட தக்கோர் சபையில் ஆலோசித்துத் தெளியத்தக்கவை யாதலின் அவற்றிற் சிலவற்றை மாத்திரம் ஈண்டு குறித்தெழுதினோம்.

அறிஞர்காள்! மேற்சுட்டிய இச்சுவாதந்திரியங்களைப் பெறுதற்குத் தற்காலம் இம்மடங்களிலுள்ள ஆபாசத் தன்மைகளையும் முற்கால நோக்கங்களையும் அரசாங்கத்தினர்க்கறிவித்து வழக்காடிப்பெறுதற்கு சைவ சமயி களாகிய நாம் அனைவருமொன்று கூடி முயற்சிப்போமானால் இதுவொரு முடியாத காரியமல்லவென்பது திண்ணம். ஆனால் ஒன்று கூடுதலாகிய

வொற்றுமைக் குணமொன்று மா
த்திரம் நம்மவர்பால் மிகவருமை
யென்பது வெள்ளிடை மலைபோல்
விளங்கத்தக்கதே. இவ்வரிய பெ
ரிய குணமொன்று மாத்திரம் ந
ம்மிடம் நிலைபெறுதற்கு முயற்சி
ப்போமானல் எக்காரியந்தான் சா
திக்காமற் போகக்கூடும்? என்ப
தைச்சற்றேயூன்றிக்கவனியுங்கள்.
இஃதொன் றருமையாதல் பற்றி
யன்றே நம்மிந்திய தேசம் பலவி
த விறைவரி முதலியவற்றல் வறு
மைக்குட்பட்டு பஞ்ச முதலியவற்
றல் அடிக்கடி தளர்ந்து மெலிந்
து வருகின்றது. இதனல் ஒற்று
மையென்னும் மேலதாம் குணமு
டையார் நம் நாட்டிவில்லை யென்
று யாம் கூறவந்தோ மல்லோம்.
அப்பெருந் தகையாளர் நம்மிடை
ப் பலரிருக்கின்றன ரென்பது தி
ண்ணம். அவர் சிலர்தானுமிலரே
ல் நம் நாடு இதினின்றும் மிகக்
கீழ்மைப் பட்டிருக்கு மென்பதை
அறிஞர்களறியா தொழியார். அ
வருண்மை பற்றியே இச்சீர்திரு
த்தமும் யாம் வரையத்துணிந்த
தென்க. பொதுத்தன்மையில் இ
ந்திய மதங்கள் யாவற்றிற்கு மிக்
காலம் இச்சீர்திருத்த மின்றியமை
யாததே. அவற்றுள் இவ்விஷய
த் தலைப்பிற்சுட்டிய பெயரானே
இச்சீர்திருத்தத்தைச் சைவ மட
ங்கள் மிக வவாவுகின்றமை அறி
யக்கிடக்கின்றது. பாண்டிய சோ
ழ நாடுகளே இவ்வுலகின்கண் சை
வ மணம் நிறையப்பெற்றனவென்
க. அவற்றுள்ளும் "பாண்டி நா
டே பழம்பதி" யாமென்க. இந்
நாட்டின்கண் சைவாபிமானிகளா
கிய வெத்தனையோ ஜமீன்தார்க
ளும், பிரபுக்களும் இருக்கின்றன
ர். இவருள் பெரும் பாலாரும்
திருவாவடுதுறையாதீனம், தருமபுரவா
தீனம், திருவண்ணமலையாதீனம். மு
தலிய சைவ மடங்களுக்குச் சீட
ர்களாகவும் காணப்படுகின்றனர்.

சைவாதீன சீடர்களாய் பாண்டிநாட்டில் இராமநாதபுரம் சேதுபதியவர்கள், சிங்கம்பட்டி தீர்த்தபதி அவர்கள், பால வனநதப், சிவகிரி, சேற்றூர், ஊர்க்காடு முதலிய ஜமீன்தார்களுஞ் சோணாட்டில் இவர்போன்ற சிற்றரசர் பலரும் சென்னை, திருநெல்வேலி, மதுரை' திரிசிரபுரம், தஞ்சாவூர், கும்பகோணம் முதலிய நகரவாசிகளாய பிரபுக்களும் விளங்குகின்றனர். இவரிற் பெரும்பாலாரும் ஒற்றுமை, ஊக்கம் முதலியவற்றிற் சிறந்தோராயிருந்தும் இக்காரியத்தில் வாளாவிருத்த லென் கருதியோ? இக்கனவான்களே இவ்விஷயத்தில் முன்னின்று மகாசபை கூட்டி முயற்சிக்கத் தகுதியுடையார்.

சைவாதீன சீடர்காள்! சைவாபிமானிகாள்! யாம் முற்கூறியன யாவும் நுமக்கொத்ததாயின் முன்வருமின். வறிதே காலத்தைத் தாழ்த்தின் பயனென்னும். நும் நாட்டைச் செழிப்பிக்க வழி தெளிமின். நும் அறத்தை விளங்கச்செய்மின். நுமது மூதாதைகள் அறத்தின் பொருட்டு ஆதீன கர்த்தர்கள் பால் நிறுத்திய பழம் பொருள்களைப்பாதுகாத்தலவரது சந்ததியாகிய நுமது கடனன்றோ? அவ்வாறு காவாதொழிந்தால் அறிவிற்சிறந்த அவரது சந்ததியாகிய நுமது பெருமைக்கிழுக்கன்றோ? நும் முன்னோரேற்படுத்திய அறம் சீர்கேடடைந்து பாழாதலைக்கண்டும் பரிபாலிக்கப் புகாதிருத்தல் பெரும்பாவமன்றோ? இதினின்றும் புத்தறம் பயன்றருமாறுளதோ? இவற்றை நன்கு சிந்தித்து அறநெறியைப்பிடிமின்.

பத்திராதிபர்.

(4-வது இலக்கத் தொடர்ச்சி.)

ந்தவையன்றே.' இவ்விடைக்காலத்தை சவனிக்குங்கால், மகமதியர் முன் நம்மிந்தியர்கள் தோட்டாவாடி போன்ற முகத்தினராய் தம் வலியிழந்து செயலற்றுப்போயினரே யன்றி யாதேனும் ஹிம்சை செய்ததாகத் தோன்றவில்லை. பின்னர் கடைக்காலமாகிய தற்காலத்தைக் கவனிக்குங்கால், கொலைபுரிதல் முதலிய குரூரச்செய்கைகளின்றேனும் இந்துக்களுக்கும் ஏனைய மதஸ்தருக்கும் யிடையிடையே நடக்கும் சச்சரவுகளையும், ஒரோர் காலம் தம்முள் மாறுபட்டு வாதப்போர் தொடங்கி ஆயுதப்போராய் முடிப்பதையும், இது மாத்திரமோ, மதப்பிரசங்கஞ் செய்கிற கிறிஸ்தவர்கள் மேலிந்துக்களும் மகமதியரும். இந்துக்கள் மேல் கிறிஸ்தவர்களுங் கல்கொண்டெறிவதும் வாய்கொண்டரற்றித் தூற்றுவதும் நாம் பன்முறை கண்ணுற்றிருக்கின்றோம். தம்மதத்தானல்லாதானை 'இவன் நீசன்' 'இவன் புலையன்' என இழிசொற்களாலிகழ்தலும், அவர்களை தீண்டல் கூட பாதகச்செயலென எண்ணலும், கட்குடியனேனுமோர் புலாலுண்பவனேனும் சூதாடியேனும் வேளாளன் வயிற்றிலோ பிராமணன் வயிற்றிலோ பிறந்து அந்நிய மதத்தை அனுசரிக்காதவன் என்ற வெற்றுப் பெயர் தரித்தலே போதும். அவன் சைவனோ, அவன் பிராமணனோ எனக்கொள்ளலும் நம்முடன் பிறந்து வளர்கிற ஓர் களைக்குணமன்றோ? அதை யென்றுதான் வேரறப் பிடுங்கி யெறிய வல்லார்களாவோம். மேற்சொல்லிப் போந்தகுணங்கள் சாதாரண ஜனங்களிடமட்டுமே யிருப்பதாக எண்ணாதீர்கள். அவதாரபுருஷர்களோவென ஐயுறக்கிடக்கும் பெரியோர்களிடமும் அக்குற்றம் குடிகொண்டே யிருந்தது. இருக்கவும் செய்கிறது.

"போற்றி சிதிடாப் புலையனைக் கண்டால்
போகப் போக சீர் புலமழிந்தவமே"

என்பது ஓர் வேளாளப் பெரியவர் வாக்கன்றோ?

இதுவரை ஐரோப்பா கண்டத்தில் கிறிஸ்துவுக்கு முன்னும் அவர்காலத்தும் அவர்க்குப் பின்னும் நடந்த ஹிம்சைகளையும் பின்னர் மகமதிய ஹிம்சைகளையும் பின்னர் நம்மிந்திய ஹிம்சைகளையுஞ் சொன்னோம். இனி சீன முதலிய தேசங்களைப்பற்றி நன்கு அறிய மார்க்கமில்லாது போய்விட்டாலும் இத்துர்க்குணம் பூர்வத்தில் எச்சாதியாருக்கு மியற்கைக்குணமெனத் தோன்றுகிறபடியால் அத்தேசத்திலும் கன்பூசியஸ் Confusious, லோயட்சீ Loatse என்பவர்கள் மதங்கள் பரவும் பொழுதும் பின்னர் புத்தமதம் வேரூன்றிய காலையும் ஹிம்சை யிருந்திருக்க வேணுமென்றே ஊகிக்க வேண்டியிருக்கின்றது.

ஆகவே மதஹிம்சை முற்காலத்தில் பூமியின் எங்கணும் பரவியிருந்ததென்பதும், தற்காலம் மேலைத்தேயங்களிலொருவாறு இல்லையென்பதும், கீழ் தேசங்களில் இன்னும் அடியோடு தொலையாது சிறுபான்மை யிருக்கின்றதென்பதும், தெரியவருகின்றன. அச்சிறுபான்மையையும் வேரறக் களைந்துவிடல் நம்பெருங்கடனெனக் கூறுமுன், மதக்ஷமையின்மையின் காரணமென்னவென்பதும் மதக்ஷமையின் ஆவசிகம் எதற்காக வென்பதும் அஃதின்மையானெய்துந் தீமை யென்னவென்பதுஞ் சற்று கவனிப்பாம்.

மதத்தைப்பற்றி யோர் தப்பான அபிப்பிராயம் அநேகருக்கிருத்தலே மதஹிம்சைக்கு ஓர் முக்கிய காரணமென்பது திண்ணம். பலர் தாம் அநுசரித்தொழுகுஞ் சமயமே உண்மையென்றும், ஏனையோர் அநுசரிப்பனவெல்லா முற்றும் அபத்தமே யென்றுங் கொள்வதோடு தாம் கைக்கொள்ளும் மதம் அநாதியாஞ் சிருஷ்டிகர்த்தாவால் ஆன்ம கோடிகளுய்யும் பொருட்டு அறிவிக்கப்பட்டதெனவும் (Revelation), ஏனைச்சமயங்களனைத்தும் மானிடரா லுண்டாக்கப்பட்டதெனவும், ஈஸ்வரனால் கிருபை கூர்ந்தருளப்பட்ட தம் முண்மைச் சமயத்தின் கண்ணெழுகாது பரசமயப்படு குழியிலாழ்க் துழலுமவர்கள் பாவிகளேயென்றும், அப்பாவிகள் ஹிம்சைக்களாதல் நியாயமேயெனவும், பலவித அநியாயங்களாற்றித் திரிகின்றனர்.

ஜனங்கள் பூர்வீககாலத்தில் Religion, society, politics மதம், ஜனசமுதாயம், ராஜரீகம் என்பன ஒவ்வொன்றிற்குமுள்ள பேதாபேதங்களை உணராதவர்களாய் ஒன்றோடொன்றைப் பிணைத்து, மதவேறுபாடுடையோரை அரசர்கள் தண்டித்தும், ஜனசமுதாயத்தின் வற்றத்திற்காக யேற்படுத்தப்பட்ட ஜாதிபேதம் முதலிய பிரிவுகளையும் ராஜரீகவிஷயமான சட்டதிட்டங்களையும் மதத்தோடிணைத்தும், அருவருக்கத்தக்க ஆபாசங்களைச் செய்துவந்தார்கள். அவர்களடைந்திருந்த நாகரீக நிலைமைக்கும் அவர்களதப்போதய கல்வித்திறனுக்கும் அதற்கதிகமான பகுத்தறிவு அதீதமாயிருந்தது. பின்னர் நாள் வளர வளர நாகரீகம் விர்த்தியாய்க் கல்வி முதிர்ந்து தன்னைச்சுற்றியுள்ள ஒவ்வொரு பொருளின் தன்மையையும் அவ்வொவ்வொன்றிற்குமுள்ள சம்பந்தாசம்பந்தங்களையும் நன்குணர முயன்ற ஜாதியார், மதம், ஜனசமுதாயம், ராஜரீகம் என்பனவற்றை ஒவ்வொன்றினின்றும் வேறுபடுத்தி ஒவ்வொன்றையும் தனித்தனியே விருத்திசெய்து வந்தார்கள். அம்மூன்றையும் இணைபிரியாது ஒருங்கே விருத்திசெய்துவந்த நம்மவர்க

ள் அநேக யிடர்க்குள்ளானார்களென்பது அறிந்த விஷயமே. இது நிற்க.

இனி மதத்தைப்பற்றி ஜனங்கள் ஓர் தப்பான அபிப்பிராயம் வைத்திருக்கிறதாக முன்னர் கூறினோம் அதை சிறிது கவனிப்பாம். தாம் அநுசரித்தொழுகுஞ் சமயம் ஈஸ்வரனால் நேரோ அளிக்கப்பட்டதென்றும் அதுவும் அநாதியாயுள்ளதென்றுங் கொள்வது, தான் பேசிவரும் பாஷையும் அவ்வாறே அநாதியாயுள்ள தென்றும் அதுவுந் தற்கால ஸ்திதியிலேயே ஈஸ்வரனா லநுக்ரகிக்கப் பட்டதென்றுங் கொள்வதுபோல எச்சாதியாருக்கும் இயற்கைவழக்கமே. comparative philology, comparative religion என்ற இரண்டு நவீன ஆராய்சியின் நூதன அறிவுகளை நன்குணர்ந்தவர்கள், தாம் மூழ்கித்தவிக்கும் அஞ்ஞானசாகரத்தினின்றுங் கரையேறுவார்கள். இந்நவீன ஆராய்ச்சியின் நுண்ணிய கருத்து எவ்வண்ணஞ் செல்கின்ற தென்பதைச் சிறிது விளக்குவாம்:—

எப்பாஷையும் அநாதியல்ல வென்பதும், ஒவ்வொரு பாஷையுந்தான் உண்டாய காலத்து தற்கால ஸ்திதியிலிருந்ததில்லை யென்பதும் comparative philology என்ற நவீன ஆராய்ச்சியுடையோர் கொள்கை. ஒவ்வொரு பாஷையும் இடையிடையே உண்டாய் தத்தம்பால்ய யௌவன பருவங்களடைந்து விருத்தியாய் வருகின்றதென்றும், சில தம்முதுமைப் பருவமடைந்து கெட்டொழிந்து போயினவென்றுங் கொள்வதோடு, இவ்வுலகின் கண் தற்காலமுள்ள பாஷைகளிலனேகம் இல்லாத காலமும் உண்டென்றும், பாஷை யொன்றுமே யில்லாத காலமுமிருந்திருக்கலாமென்றும், அவர் சொல்லுகிறதுண்டு. ஆயின் பாஷையின் மூலகாரண மென்னையோவெனில், மனித ஜாதிக்கு இயற்கையமைப்பான Faculty of Speech பேசும் வன்மையே. தன் மனத்துதித்த கருத்தை பிறருக்குப் புகட்டவேணுமென்ற விருப்பம் தனக்குரிய பேசும் வன்மையின் உதவியைக் கைக்கொண்டு பாஷையை உண்டாக்கிய தென்பர் அந்நூலுடையோர். பாஷையின் வளர்ச்சியும் விருத்தியும் மேன்மையும் அதைப் பேசும் ஜாதியாரது நிலைமையையும் அவர்களது நாகரீகத்தையும் அறிவையும் பொறுத்ததென்பது அறிந்த விஷயமே. மனிதருக்கு இயல்பிலேயே பேசும் வன்மையொன்று ஏற்பட்டது போல, இயற்கையிலேயே மதவிசாரணைத் தத்துவமும் Faculty of religious enquiry ஏற்பட்டிருக்கின்றது. அதன் ஊக்கத்தால் தம்மைச் சுற்றியுள்ள பொருள்களொவ்வொன்றற்குமுள்ள சம்பந்தாசம்பந்தங்களையு மறிய முயன்று அதன் பயனைப்

பற்பல மதங்கள் பற்பல இடங்கள்தோறு முண்டாயதென்றும் பாஷைகள் போலவே மதங்களும் விருத்தியடைந்து வருகின்றன வென்றும் அவ்வக்காலத்து நாகரீகத்திற்கேற்ப ஒவ்வொரு மதங்களின் கொள்கைகளுஞ் சிறிதுசிறிது மாறுதலடைகின்றன வென்றும் முன்னுள்ள அநேக மதங்கள் கெட்டொழிந்து போயின வென்றும் comparative religion என்ற நவீன ஆராய்ச்சியுடையோர் சொல்வர்.

ஆகவே பற்பல பாஷைகள் எவ்வண்ணம் பற்பல இடங்களில் பிறந்து வளர்ந்து விருத்தியடைந்தும், அழிந்தும் போவதுபோல சமயங்களும் பலவுண்டாய் வளர்ந்து யௌவன முதுமைப்பருவங்களடைந்து வருகின்றனவேயன்றி வேறன்று. ஆகவே பிறமத தூஷணஞ்செய்வது அறியாமையே. ஒவ்வொரு ஜாதியாரும் மனம்வாக்குக் கதீதமான பொருள் எதுவென்றும் எத்தன்மையதென்றும் அதற்கும் ஜீவனுக்குமுள்ள சம்பந்தாசம்பந்தமென்னவென்றும் இவ்வுலகத்தோற்றம் அழிவு முதலியவை எவ்வகைத்து? எக்காரணத்தது? என்றும் உண்மையில் மனப்பூரணமாய் அறிய முயல்வதேயன்றி தம்மைப் படுகுழியில் வீழ்த்திக்கொள்ள முயல்வதாக எண்ணுதீர்கள். ஒவ்வோர் மதத்திலும் புண்ணிய புருஷர்கள் பலரிருந்ததை என்றும் பார்க்கின்றோம். அவர்களையெல்லாம் பிறமத தூஷணஞ்செய்யும் நீவிர் எவ்வண்ணம் மதிக்கின்றீர். இங்கிலீஷ் பாஷை உண்டாக்கியதற்காக ஆங்கிலரையும் அரபிய பாஷை ஏற்படுத்தியதற்காக அரபியரையும் பழித்தல் அழகாகுமோ! அவ்வண்ணம் பாஷைகளமைதல் உலகஇயற்கையன்றோ? அதுபோலவே பற்பல தேசங்களிலும் வசிக்கும் ஜாதியார் தத்தம்மிடத்துள்ள Faculty of religious enquiry என்னும் மதவிசாரணைத் தத்துவகுணத்தின் தூண்டுதலின் பேரில் ஒவ்வோர் மதம் ஏற்படுதலும் உலக இயற்கையன்றோ! அவ்வுலக வியல்பைத் தூஷணை செய்வது மதியீனமாகாவோ?

இனி மதவிம்சையின் அவசியம் எதற்காக என்பதைக் கவனிக்கும்பொருட்டு, மதத்தின் பல உறுப்புகளையும் அவற்றின் தன்மையையும் சிறிது சவப்பாம். ஒவ்வொரு சமயமும் நான்கு பாகமாகப் பிரிக்கப்படலாம். 1-வது ஞான காண்டம். Philosophy of religion. 2-வது புராண காண்டம். Legends of religion 3-வது ஒழுக்க காண்டம். Ethics of religion. 4-வது கர்மகாண்டம். Ceremonies of religion.

இவற்றுள் முதலாவதான ஞான காண்டத்தில் உலகத்தோற்றம் அழிவுக்கு மூலகாரணம் என்னவென்பதும் உலகின் சகல பொருள்களுக்குமுள்ள சம்பந்தாசம்பந்தமென்னவென்பதும் ஜீவன் முதலியவற்றின் ஜென்ம சாபல்யமென்னவென்பது மாகிய உண்மைகளெடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

பதியிலக்கணம்.

(5-வது இலக்கத் தொடர்ச்சி.)

அப்பதிதான் தமது உண்மை நிலையில் முக்குணங்களையுங் கடந்த நிர்க்குணவஸ்துவாய் நின்று, என்றும் மாருத பெற்றித்தாகிய எண்குணங்களையு முடையராகுவர். அவ்வெண்குணங்களாவன :—1 தன் வயத்தனுதல் 2 தூயவுடம்பினனுதல் 3 இயற்கையுணர்வினனுதல் 4 முற்று முணர்தல் 5 பாசங்களி னீங்குதல் 6 பேரருளுடைமை 7 முடிவிலாற்றலுடைமை 8 வரம்பிலின்பமுடைமை என்பவைகளே.

இறைவனுக்கு இவை (எண்குணங்கள்) இயைபுடையன வென்பதைக் காட்டுதும்.

1. தனக்கு மேலொரு கருத்தாவின்றித் தான் ஒரு முழுமுதலாயிருத்தல் பற்றித் தன் வயத்தனுதல் என்னுங் குணமும், 2. தனக்குவேண்டுங் காலத்தில் தனது ஞான சத்தியாலாகிய வுருவெடுத்தருளுதலால் தூய வுடம்பினனென்னுங் குணமும், 3. எல்லாக்காரியங்களையும் அறிவிப்பாரின்றித் தானே யறிந்து நடத்தவேண்டிய திருத்தலால் இயற்கை யுணர்வினனென்னுங்குணமும், 4. எல்லாக்காரியத்தையும் அதற்கு ஏற்பவறிந்து நடத்தவேண்டியதிருத்தலால் முற்றுமுணர்தலும், 5. அநாதியே பந்தங்களின்றிப் பாசம்பந்திகளாகிய ஆன்மாக்களை ஈடேற்ற வேண்டியதிருத்தலால் பாசங்களினீங்குதல் என்னும் குணமும், 6. ஆன்மாக்கள் பிறப்பிறப்பென்னுந் துயர்க்கடலுள் மயங்கித்தத்தளித்து வருதலைக் கண்டு இரங்கி, அவர்களை அதினின்றும் விடுவித்து முத்திவீட்டின்கண் ணுய்த்தலால் பேரருளுடைமை என்னுங்குணமும், 7. தனது அநந்த சத்திகளால் பல வேறுவகைப்பட நின்று அவரவர் கொள்கைகளுக்கெல்லாம் ஏற்குமாறு நிற்கும் முதற்பொருளாதலால் முடிவிலாற்ற லுடைமையும், 8. தான் இன்பசொரூபியாய் நின்று தன்னை யடைந்தோர்களுக்கெல்லாம் இன்பமுதவுதலால் வரம்பிலின்ப முடைமையும், அவனுக்கு இயல்பிலேயே யமைந்துகிடக்கு மவைகளாம்.

அவன் தன்னோடு அபின்னமாய் இயைந்துநிற்குந் தனதுசத்திகொண்டு ஐந்தொழிலியற்றுவன். மன்னர் மன்னனொருவன் தனது ஆஞ்ஞையால் மந்திரிகள், பிரதானிகள் முதலியோரைப் பற்பலவிதமாய்ச் செலுத்துமாப்போல் இறைவனுந் தனது ஆஞ்ஞையாகிய சக்திகொண்டு இப்பிரபஞ்சத்தை நடத்துவன் இச்சக்தி, ஞானமயமானது.

எங்கெங்கு ஞானம் நிகழுமோ அங்கு இச்சையுங் கிரியையும் நிகழும்.

ஆதலால் ஞான சத்தியோடுகூடிய இறைவனும் தனது காருண்ணிய மிகுதியினால் கிருத்தியஞ் செய்யப் புகுவானாயினன்.

ஒருவன் ஒரு தொழிலியற்றுங்கால், அது தற்பிரயோஜனங்கருதியாவது, பரப்பிரயோஜனங் கருதியாவது அல்லது யாதொரு பிரயோஜனம் கருதாமலாவது இயற்றுதல் கூடும்.

இம்மூன்று வகுப்பினுள், ஒருவன் சுயப்பிரயோஜனங்கருதிச் செய்தல், துன்பங்களிலிருந்து நீங்கவாவது, இன்பங்களை யநுபவித்தற்காவது, அல்லது இவ்வுலகின்கண் புகழ்ப்பெறெய்துதற்காவது இச்சித்தாயிருக்குமேயன்றி வேறன்று.

பரப்பிரயோஜனங்கருதிச் செய்யுமதோ, அவன் (ஒருவன்) பிறரிடத்து வைத்த காருண்ணிய மிகுதிபற்றி யென்க.

யாதொரு பிரயோஜனங்கருதாது செய்தல் விளையாட்டாய் முடியுமென்க.

ஆதல்பற்றி இறைவன் இயற்றும் ஐந்தொழில் இம்மூன்றுவகையினுள் எத்திறத்ததென்று ஆய்வோமாக.

இறைவன், தனக்கு ஒப்பாரும், மிக்காருமின்றி, யாதொரு குற்றமின்றி அநாதியே பேரானந்த சொருபமுடைய முழுமுதலாதல்பற்றி அக்கிருத்தியங்களைத் தன்னயங்கருதிச் செய்தவனாக மாட்டான்.

அவன் (இறைவன்) பேரறிவுடையனாதல் பற்றியும், மற்றவர்களுக்கு (ஆன்மாக்களுக்கு) தனது குற்றமற்ற கிருபா சமுத்திரத்தை யளிக்கும் நோக்கமுடையனாதல் பற்றியும் தனது கிருத்தியங்களை விளையாட்டாகச் செய்யான்.

இவ்விருவகை பற்றிக் கிருத்தியஞ் செய்தலில்லையாகவே அவன் பிறர் பொருட்டு தான் வைத்த தண்ணளிபற்றியென்றே கொள்ளல்வேண்டும்.

இனி நாம் அப் பஞ்ச கிருத்தியந் தானென்னவென்று ஆய்ந்தறிவோமாக.

சிருஷ்டி. தோற்றம்.
திதி. நிலைநிறுத்தல்.
சம்ஹாரம். அழிப்பு.
திரோபவம். மறைத்தல்.
அநுக்கிரகம். கிருபையளித்தல்.

ஆகிய இவ்வைந் தொழிலே பஞ்சகிருத்தியம் என்று அழைக்கப்பெறும்.

1. சிருஷ்டி. இந்த வுலகத்துக்கு மூலகாரணமாயுள்ள அவ்வியக்தமாயையின் கண்ணின்று, ஆன்மாக்களுக்கு தநுகரண புவனபோகங்களை யளிப்பதாம்.

2. ஸ்திதி. இவ்வுலகத்தின் மேற்கூறி யாங்கு ஆன்மாக்களைப் பொருத்தி இன்பதுன்பங்களை யநுபவிக்கச் செய்தலாம்.

வேமன மொழி.

இந்நூல் தெலுங்கு நாட்டில் வசியகுலத்திற ரேன்றி இற்றைக்கு 700 வருடங்களுக்கு முன் 2000 வருடங்கள் உலகில் காயசித்தி யோகசித்தி ஞானசித்திகளைப் பெற்றவராய் விளங்கிக்கொண்டிருந்த வேமனயோகிகளால் தெலுங்கில் கவி ரூபமாக அருளிச்செய்யப்பட்டது. இப்பொழுது 1300 கவிகள் கிடைத்திருக்கின்றன. இதிற் பற்பல நீதிகளும் யோக ஞானவிடயங்களும், தெளிவுற வுணர்த்தப்பட்டுள்ளன. வேதாகமங்களிற் கிடக்கும் பல நுட்பங்களுங் கூறப்பட்டுள்ளன. இவ்வரிய நூலைத் தமிழ் நிலத்தினரும் அறிந்துய்தற்பொருட்டுத் தமிழில் வெண்பாக்களாக மொழி பெயர்த்து வருகின்றனன். இவ்வியோகியார் சரித்திரத்தைப் பின்னர் விளக்கத் திட்டுவேல்.

காப்பு—கலித்துறை.

1. சிவகவிகட்கு §நவகவிகட்குஞ் * சிவவனிக்குஞ்
சிவமிகுஞான நற்சிந்தா மணிக்குஞ் சிவ * கணக்கும்
சிவமெய்ப்பொருட்கும் பரகுரு நாதற்குஞ் சித்திமுத்திச்
சிவமிக வந்தனஞ் செய்குவை வேமன சிந்தை வைத்தே.

(நூற்பயன்)

2. மங்களமார் சீர்வே மனன்சொன்ன நன்மொழிகள்
பங்கமிலாது படித்துணர்வார்க்—கங்கண்
மனத்தறி யாத வழுத்தவொண் ணாத
கனத்தபொருள் கைப்படும்வே மா.

நூல்

1. வேமன யோகி விளங்கினு * னிஃதறிந்தார்
கோமளப் பூசை குயிற்றிடுவர்—தாமமுறப்
பூசையளவினிற் போகமோக் கம்வரும்
மாசிலா நந்த வேமா.

* சிவஅனி=சிவபத்தி. § கணக்கும்=கணத்துக்கும்.

* இஃதறிந்தார்=தவத்தின் விசேடத்தால் சித்திபெற்று விளங்கி னுனென்றறிந்தவர் அச்சித்திகளைத் தாமும் பெறும் பொருட்டு பூசைபுரிவர், அடியார்ப்புரியார்.

2. பேசுவா யென்னிலேன் பேசாதிருக்கின்றாய்
பேசுவா யையா பெரிதிவரக்—கூசனது
மாற்ற மெலாம் யானே மதித்துணர்வே னென்றும்
மாற்றமி லாநந்த வேமா.

3. ஆன்மசுத்தி யில்லாத வாசார மெற்றுக்குப்
பாண்டசுத்தி யில்லாத பாகமே—ஞான்றவெழிற்
சித்தசுத்தி யில்லாச் சிவபூஜை யெற்றுக்கு
வித்தகவாநந்த வே மா.

4. களங்கமிலி ரத்தினக் கல்லொன்றே சாலும்
பளபளப்புக் கற்கள் பலவேன்—உளந்தெளியக்
கற்பதற்கு ஞானக் கவியொன்றே சாலுநல்
லற்புதவா நந்த வேமா.

5. மன்னியுனை நோக்கின் மறப்பன் றனைத்தானே
நின்னைமறப் பன்றன்னை நேர்நோக்கி—லென்னினர
னுன்னையுந் தன்னையு மோர்த லொருங்கெங்ஙன்
மின்னு மாநந்த வேமா

6. வீய்பவன் யாவன் வீயாதவன் யாருற்றுள்கி
யாய்வுறில் வெட்டவெளியாகு நீர்—வாய்குடத்திற்
சூரியன்போ லாமுயிர்கள் தோன்று முடலழியு
மாறு மாநந்த வேமா.

7. கண்ணாடிப் பாத்திரத்துட் காணுந்தீ பம்போல
வுண்ணாடித் தேர்பவர்தம் முள்ளத்துள்—ளண்ணாத
மெய்யறிவு வீற்றிருக்கும் வித்தமண் பெண்ணைசையா
மய்யகலா நந்த வேமா.

8. விரும்பி யமுதளிக்கா வீண்மனிதர் மண்ணி
லரும்பிப் பிறந்தென் னழிந்தென்—பெரும்புற்றிற்
செல்லநந்தந் தோற்றிச் சிதைந்தழித லின்று ‡வல்
வெல்லறிவா நந்த வேமா,

‡ அல்—அஞ்ஞானவிருள்.

உமாபதி.

முதல் அதிகாரம்.

முனிக் கிறைவற்கு உறையுளாம் பொதியம். அப்பொதியிற்குப் பொன்னணியாயிலங்கிக், கொழித்த மணற்பரப்பை யுடைத்தா, யிருமருங்குங், கமழ், பூங்கமுகு, பயன்றருமா, நெல்லி,யாதியவற்றாற் சிறந்தோங்கும் பொழிலமையப்பெற்றுக் கல கல வென்ற வோசை யொழியாத் தண்ணடையுடையது தாம்பிர வருணி. ‘இவ்வாற்றின் மூலங்கண்டோர் யாரே!’ என வெல்லோருஞ் சொல்லும் மொழியு முண்மையே. நீரெனின், மாசில் மணிபோல் விளங்கும் விளக்கமும், நான்கு பருவத்தும் வற்றாநீர்மையுமுடைத்து. மாரிகாலத்துப் பெயலான் இருகரையுந் ததும்பப் பெருக்கமுறுங்கால், துணைக் கான்யாற்றுற் கலக்க மெய்தினுந், தன்னொழுக்கந் தவிராத் தன்மையுடைத்து. இஃதன்றோ உயர்ந்தோர் சீலமும்!

இனி, ஆங்காங்கு அவ்வாற்றின் பாங்கர்க் குரக்கினம் நின்று கூத்தாடச் சிற்சில பையல்கள், ஆண் டண்டி அவ்வானரங்க ளேக்கும் வண்ணம், உறைப்புள பண்டங்களையும் கறுச்செதி தண்டங்களையு மவற்றினருகு வைத்து, அயனிற்க, அவைகளவ்வுணவுண்டு, எரிபொறுது, துனிவுற்று, அக்கோல் கொடு, ஒன்றை யொன்றேச்சி, யுரக்கக் கூவி யோடி மரமேற, அத்திறங் கண்டு, அப்பையல்க ளின்புறுவர். ஒரு புறத்திஃது நிகழாநிற்க, ஆற்றினகவயிற் சென்று, நானமாடுநங்கைகள் தங்கையிலிருக்குங் கனி வகைகளையக்குரக்கீட்டந் திரண் டோடிவந்து, கவர்ந்தொழியுந் தோற்றமும், அம்மகளிர் மூக்கின் மேலிட்ட விரலினராய் நிற்கு நிலையைக்கண்டு, பக்கல் நிற்கும் பையல்கள், கைகொட்டியார்க்குங் கொக்கரிப்பும், ஆண்டுக் காண்டோறுங் களிவிளைக்கும்.

இவ்விசேடங்க ணிரம்பப் பெற்றுத், தன்னை யரணென வடைந்தோரது தீவினைவிளைவுக் கோரால மென விளங்குங் குளிரருவியை யுடையது பாவநாசம். அகத்திய மலையத் தடிவாரத்துற்ற திப் பதியாதலின், இன்ன போதுதான், எழிலிபொழியு மென்னுமோர் வரையின்றி இடைநின்று நின்று வானந்தலைஇய தன்மையால், சுற்றிலும் பசேலென்ற வண்ணமன்றிப் பிற நிறங் காண் பரிதாம் பெற்றியது. கவயமா, மரையான், காட்டெருமை கணன்மையான், கடுவாய் முதலிய கொடுமாக்கள், நிரை நிரையாய், அப்பதியணித்தாம் புல்லாந்தரைகளிற் புக்குழலுந் தன்மையானிஃது வேட்டையாடுதற்கேற்ற விடமுமாம்.

கிறிஸ்து சகாத்ரம், பதினேழாம் நூற்றாண்டின்கண் வடகாசி மாநகரம் போல், இடவாசி பொருந்திய தென்காசியெனுஞ் சீருரைத் தலைநகரா யமைத்துக் கோல் நடாத்திய பராக்கிரம பாண்டியனது குடைக்கீழ்ச் சிற்றரச ராய் வாழ்ந்தவரு ளொருவ னுவனிப் பாவநாசபதி. அனையான் பெயர் கலியாண சுந்தரன். இல்லாளுந் தானு நீடியநாள், மனையறத்து நற்குண ராயினும், மகப்பேறின் மையான், கலியாணன் மனமுழந்து, பிறைசூடிபா னெஞ்ஞான்றி என்றுமவனைப் பரசுவானாயினன்.

பயனை வேட்டன்றி, மெய்ப்பொருளை வழுத்துவது மானிடர்க்கில்லையெனச் சிற்சிலர் பிதற்றினு மிவர்க்கேலாது. இவன், வெண்பலிபூண்டு, அரனிற்புக்கு, அவன் முன்னின்று, நெஞ்சு நெக்குருகிக் கண்ணீர்ததும்ப நிற்கு நிலை யென்றும் பாராட்டற் பாலது. அருஞ்சீல னென்ன அனைவருங்கூற அறநெறி ஒழுகுவோன். தன் குடிகண்முறைமைச் செவ்வனே கேட்டு முறை செயுஞ் செங்கோலன். பாவநாசத்துக் கோக் குலத்திலிது காறுந்தோன்றி யவர்களு ளிக் கலியாணனைப்போல், வண்மையினும், வன்மையினுஞ் சிறந்தோனொருவனேனும் பிறந்திலனென்று, அப்பதியின் முதியோர் செப்பும் வண்ணம், எப்பண்பும் நிரம்பப் பெற்று இணையின்றி விளங்கினனிவ் வேந்தல்.

அவன் மனையாளோ; அந்தோ! முன்னம், பொறையெனுங் குண நிறையை உலகினுக் கறிவுறுத்து, மெய்ப்பொருளின் விதியால், மேதினியிற்றோன்றிய, கிரேக்க மகரும், தத்துவக் கணக்கருக்கோர் விளக்கெனப் பிறங்கினோருமாகிய சாக்ரட்டீஸ், என்பவருக்கு வாய்த்த, சாந்தபி யெனும் பேய்மனியை, அவட்கு ஒப்பிடத்தகும். கலியாண சுந்தரன், தான் மணம்புரிகாலத்து, அன்னாள் முகநோக்கையறிந்தனனே யன்றி, அகவாக்கையோ ரிறையு மறிந்தன னல்லன்.

தன்னொரே தங்கையாகிய, தாயம்மாள், என்பாள்மேல் மிகவாஞ்சை கொண்டவனாதலின், அவளது தலைவனவட்கு, ஒரே புகல்வனும், உமாபதியைத்தந்து, உயிர்வைத்தானாக, அவளுங் கைம்மை யடைய, அத்தங்கையைத் தன் னிற்கண்மணி வைத்துப்பாலித்து, அவள் தநயனையுந் தன்னன் பூட்டி வளர்த்துவந்தனன் கல்யாணன். சிறிது காலஞ் செல்லக், கல்யாணன் றங்கையுந் தன்றலைவன்மேல் வைத்த காதலாற் சோக முற்றிறந்தனள். அங்ஙன நேரக், கல்யாணற்கு, அம்மகவின் மேல்வைத்த நேயம், முன்னினு மேலிட்டு, அக்குழவி வளர்தொறு மந்நேயமும் வளர்த லுற்றது. உமாபதியும் ஐயாட்டைப் பருவத்தானாயினன். "விளையும் பயிர் முளையிற் றெரியும்." உமாபதியின் முகத்துடியும், அகப்பொலிவுங் காணுநர் கண்ணையுமனதையுங் கவர்ந்தன.

கலியாணனது மனையறம் நெடுநாள் மகவின்றி, வறிதே சென்றதாயினும், பின்னர், தன் தவப்பயனானும் தான்வழிபடுகடவுளினின்னருளானும், அவனில்லாள் கருவுற்று, ஆழியாற்கு ஆழியீன்ற அழகியே போல உமாபதிக்கு வாய்த்த உயிர்த்துணையோ வென. அந்நகருளார் போற்றுமாறு, ஓர் பெண்மணியை யீன்றனள்.

"மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கல னன்மக்கட் பேறு."

12. பட்டணத்தார் கடைநாளில் கூட்டணத்தா ரானார்
   பத்தர் அறுபான் மூவர் செத்தங்கே போனார் ;
அட்டமரணம் தவிர்தல் துறவறத்து மில்லை
   துறவறமும் மறுவறமுஞ் சொல்லினொரு அறமே !

13. சக்கரம்போல் உலகசுக துக்கமென இரண்டும்
   தாஞ்சுழன்றே வரும், உலகீர் நிலைசுழன்று நில்லீர்,
பக்கத்தே பிற பிறப்பும் பவிசு தரித்திரமும்
   பார்த்திருந்தும் பார்த்தறியாப் பதடியென நடித்தீர்.

14. திடமான தேகமென்றும் தேசுடைய தென்றும்
   செருக்கடைந்து போகாதிர் திடிரெனவோர் நோயால்
கடமான நம்வலியு நம்மெழிலும் கடிய
   காற்றிலவம் பஞ்சாகத் தூற்றிவிடப் படுமே.

15. புத்தியிலோ தேவகுரு புகழ்படைத்தார் அவர்க்கும்
   புகட்டிவிப்பேம் எமதுபுத்தி எனத்தருக்கிப் பொருமீர்
பித்தமெனுந் தீயின்முனர் புத்தி எரிதுரும்பே
   பேசினதார்க்கிகம் விண்டு பிதற்றினரு முளரே.

16. இன்பதுன்ப மிரண்டு மிங்ஙனிடைந்தும் நிலைபுடைந்தும்
   ஈறில்சுகந் தேடுவர்போல் எத்தனையோ மாந்தர்
அன்பவித்து அருளவித்து அவை செயல்களவித்து
   அப்பில்வரு குமிழியினைத் துய்ப்பர் நலனென்றே.

17. கொள்ளைவஞ்சம் கோள்படிறு கோறல்முத லேனைக்
   கொடுமையெலாங் குறிப்பிலின்பங் கொள்ளுமொரு பொருட்டே
எள்ளினுமிச் சிறியவின்பம் எள்ளி நடவாதே
   எடுப்பதென்னே தோண்மேலோ ரிடம்பெரிய குன்றம் !

18. எதிர்ந்தடரும் கார்படலத்திடை இடைய ஒழிக்கால்
   எய்துவபோல் இன்பநிலை எய்தி மறைந்திடுதல்
மதியிடை நீர் வைம்மின் மடந்தருந் தீமையனைத்தும்
   வான் சுடர் முன் பனிபோன்று மறையுமிது திண்ணம்.

II

உலக மெய் வாழ்க்கை.

1. மாயையென்றும் மலடிமக வென்றும் விசும்பிடையே
மலரென்று மிவ்வுலகைச் சிலர் கூறுகின்றார் ;
'தீ'யையுரை நாவழலால் தீய்கிலதா மெனினும்
செகம்பொய்யென் றுரைப்பவர்தந் திருமொழிபொய் யாதோ ?

2. எல்லாம் பொய், எல்லாம் பொய், எனப் பிதற்றுங்காலை
இவர்கூற்றும் பொய்யாகி இடருழப் பரந்தோ !
நில்லாமை யுண்டெனிலோ நிற்பவையு முளவே
நீணிலத்தில் பொய்வேண்டின் மெய் வேண்டல் நியதி.

3. மாகமலர் பொய்யெனினும் மடுமலர் பொய்யாமோ ?
மலடிமைந்த னிலனெனின் மலடியு மிங்கிலளோ ?
வேகவரா வுருகயிறு வெள்ளியுறு கிளிஞ்சில்
விடம்விலைபெறு வெனினும் விளம்பு பொருளலவோ ?

4. இல்லாத பொருளுவமித் திருப்பவை யில்லென்னல்
என்தாயின் மணங்காணேன் மணந்தனளென் றிசைத்தல்
செல்லாதென் றொருசிறுடன் செப்புவதொப் பாமால்
சீரியரும் மெய்சிதையத் தெரிப்பாரோ வுவமை ?

5. மாற்றம்வளர் சரமசரத் தோற்றமென்றும் மாந்தர்
மனமாம்புன் குரங்கோடும் வனமாமென் றணியாய்த்
தூற்றிவிட்ட மனுடர்தொகை சொல்லிலடங் காதே
தோற்றமின்றிக் கண்டபொருள் சாற்றுதிர் ஒன்றேனும்.

6. மனைவிமக்கள் யாரெவரோ கனவுதருங் கூத்தில்
மனமென்னும் அரங்கினிடைத் தினந்தோன்று நடரே,
எனவிசைத்தல் இரண்டுகண்ணு மூடிவெளி யுலகம்
இருண்டதென வொருவனுரைக் கெதிராகுஞ் சதிரே.

இப்படி விசாரப்பட்டுக் கொண்டுவருகையில் கோட்டைமதிலிலிருக்குமொரு சிறிய வாயிலினடுத்து வந்து சேர்ந்தனள். அவ்வாயிலின் வழியாய்ப் போக்குவரத்து அதிகம் கிடையாது. அஃதோர் மறைவழியாக மாத்திரமே உபயோகிக்கப்பட்டுளது. அவ்வழி தெருவிலுய்க்கும் வழியாயிருந்தது. அதை யடுத்தவுடன் நிழலாடுவதைக் கண்டு ஒரு மனித னங்கிருந்து குதித்தெழுந்து பாய்ந்தனன். அவன் அவளை வழி மறித்துக்கொண்டான்.

முதற்கண் அவளவ்விடம் போனபொழுது அம்மதிலைக் கடந்து வெளியிற் போக வேண்டுமென்ற கருத்தை அவள் கொண்டிலள் என்பது திண்ணம். ஆயினு மவ்வாயிலின் வழியாய் அவள் வெளியிற் போய்விடக் கூடாதென்று கருதி அவ்விடத்தைக் காப்பதற்கு ஒருவன் கட்டளை பெற்றிருக்கிறுனென் றறிந்த பின்னர் அவ்வழியாய் எப்படியாவது வெளியிற் போகாதிருப்பது தகுதியன்று என்ற எண்ணம் அவள் மனதிற் பதிந்தது. பெண்பாலாருக்கு இது பொதுவான குணமாகும். அவர்களிடத்தில் நாம் நம்பிக்கையுடையவரா யிருக்குங் காலமட்டும் அவர்கள் நம்மை அஞ்சியே நடப்பார்கள். நாம் சிறிதும் நம்பிக்கையற்றவராயிருக்கிறோமென்று அவர்கள் அறிந்து கொள்வார்களாகில் அவர்கள் நம்மை யெப்படியாவது ஏமாற்ற வழி பார்ப்பார்கள் என்பது திண்ணம். 'தற்காக்குங் காப்பேதலை' என்ற ஆன்றோர் மொழியும் இக்கருத்தையே விளக்கா நிற்கின்றது. காலவனுடைய முரட்டு வலிக்கும் தன்னுடைய சாந்தமான உபாயத்திற்கும் உள்ள பலாபலங்களைச் சோதித்தறிய வேண்டுமென்ற பேராவா அவள் மனத்துடனுதித்தது. உடனே அவள் அங்கிருந்தவனைச் சிறிதும் பொருளாக நினையாதவள் போல் திடீரென்று அவ்வாயிலிற்குள் பாய்ந்தனள். இங்ஙனம் பாய்கையில் அவள் அவன் கையில் பிடித்திருந்த ஆயுதத்தின்மேல் கால் தவறி விழுந்தனள். உடன் திடுக்கிட்டவள் போலெழுந்து, "இதென்ன சங்கடம்! நீ யார் ஐய? இந்நிசியில் துயிலொழிந்து நீயிங்கு நிற்பதென்? அரசன் கட்டளையிட்டமைத்தாற் கூட இந்த இருட்டில் ஒருவரும் தன்விருப்பிடத்தை விட்டு நகர மாட்டாரே? நீயிங்கே எதற்காக வந்தாய்?" என்றனள்.

"நான் அரச னதாணையாலிங்கு நிற்கிறேன்." என்று மெல்லப் பேசினன். அரவ முற்று மடங்கிய நள்ளிருட்பொழுதில் தனியிடத்தில் அழகே யோருருவம் பெற்று வந்து தன்னெதிரில் துய்யவெள்ளியதான ஓர் துயிலுடுத்து நிற்பதைக் கண்ட இவனதா வெண்ணம் உரைத்துப் பேசவெழும்? இக்கா

ட்சி இவன் மனதை முற்றுங்கவர்ந்து கொண்டது மாத்திரமன்று பெருங்கவலையையு மிவனுக்குண்டாக்கிற்று. இஃது நினைவோ அல்லது கனவோ என்றிவன் ஐயுற்றனன் அன்றி உண்மையான தோற்றமென்று கொண்டிலன். இளவரசி ஒரு கையை மதிலின்மீது ஊன்றிக்கொண்டு சிறிது சாய்ந்து நின்றனள். அவனை யுற்றுப்பார்த்து விட்டுச் சிறிது முறுவல் காட்டு முகபாவத்துடன் "இளவரசியாகிய செல்வியாளிவ்வழியைக் கடந்து போகாமற் பார்த்துக்கொள்ளும்படி யுனக்குக் கட்டளை யுண்டோ?" என்று கேட்டு விட்டுச் சிறிது மந்தச் சிரிப்புச் சிரித்தனள். பின்னர் அவன் கிட்டப் போய் நின்று கொண்டு "என்விடத்தில் அவர்களுக்கு இவ்வளவு அச்சமிருக்கிறதென்று தெரிகிறதே. இன்றேல் என்னைத் தடுப்பதற் கென்று உன்னைப் போன்ற சூரர்களை ஆயுதபாணியாய் நிற்கக் கட்டளை யிடவேண்டிய ஆவசியம் இல்லையே. என்விடத்தி லிவ்வாடவர்களுக் கித்தனை யச்சமிருக்கிறதாக நா னிப்பொழுதுதான் தெரிந்து கொண்டேன்" என்றனள்.

"இஃது அரசனாணையே" என்று சொல்லி விட்டுத் தன்கையிலிருந்த படையைச் சிறிது நெகிழப் பிடித்துக்கொண்டு தோள்மே லேற்றி வைத்தனன்.

பின்னுமவள் அவனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே "ஒரு பெண் பிள்ளையைத் தடுத்து நிறுத்துவதற்கு ஆண்பிள்ளைக் காயுதமும் வேண்டுமோ? விருப்பமிருந்தால் மாதர்களைத் தழுவிக் கொள்வதற்கும் விருப்பமிலாக்கால் அவர்களைத் தூரத்தில் நிறுத்தி விப்பதற்கும் ஆற்றலுடைய புயங்களைக் கடவுள் ஆடவர்களுக் கியற்கையாகவே அமைத்திருக்கின்றனரே. எந்த வீரனும் படைக்கலத்தை யோங்கி மாதர் மீது பிரயோகித்ததாய் நானிதுவரையுங் கேட்டதில்லை. அவள் போர் புரியத் தொடங்கினாலும் அவளைத் தடுத்து நிறுத்த அவன் கைவலி யொன்று போதுமே" என்றாள். இதைக் கேட்ட சேவகன் சிரித்து விட்டுத் தன் படைக்கலத்தைத் தோளிலிருந்து கீழிறக்கி யொருபக்கமாய்ச் சேர்த்து வைத்துக் கொண்டு தா னின்ற நிலையை விட்டுச் சற்று விலகி நின்றான்.

செல்வியாள் இனிய குரலில் "உண்மையாகவே நான் இவ்வரம்பு கடந்து போக நினைத்திலேன். இப்படைக்கையிலில்லாமல் நீ மாத்திரமிருந்து நின்றாலும் நானுன்னை யெதிர்க்கும் பக்ஷத்தில் உன்னிச்சைப் படி யென்னைச் செல்ல வொட்டாமல் தடுத்து நிறுத்து மாற்றல் உன் புயத்திற்குண்டு என்பதறிதியே" என்றாள்.

"ஆனால் ஒரு இளவரசியை அவ்வாறு செய்யுந் துணிவு எனக்குண்டா

குமென்ருல் அவ்வாறு நான் செய்வதற் கென்புயத்திற் காற்றலுண்டு என்பதற்குச் சந்தேகம் சிறிது மில்லை" என்ருன்.

கண் கொட்டாமல் அவனையே பார்த்துக் கொண்டு இளவரசி "ஆழ்ந்து பார்க்கில் இளவரசியும் ஒரு பெண்பிள்ளை தானே. வேண்டுமெனில் பரீக்ஷித்துப் பார்த்து விடலாமே. ஐய, எங்கே உன்கையிலிருக்கும் படையைச் சற்றங்கே சுவரிற் சேர்த்துவை பார்க்கட்டும்; இதோ! நானுன்னைக் கடந்து செல்ல எத்தனிக்கின்றேன்; என்னை நிறுத்தி விடலாம் என்பதைப் பிரத்தியக்ஷமாய்த் தெரிந்து கொள்ளலாமே யன்ருே?" என்றனள்.

இதைக் கேட்டு அந்தச் சேவகன் கைப்படையைச் சுவரில்சாரவைத்து விட்டு இரண்டு கரங்களையு மிரண்டு இடுப்பிலும் பொருந்த வைத்துக்கொண்டு இளவரசி பாய்ந்து செல்வதைத் தடுக்கக் கவனமாய் நின்ருன். செல்வியாள் சிறிது பின்விட்டுச் சென்று வேகத்துடன் அவனைத் தாண்டிப் போக முன் பாய்ந்தாள். அவன் தன்னிரு கரங்களையும் பரக்க நீட்டி அவளை மறித்துக் கொள்ள எத்தனித்தனன். அவளுடன் அவ்வழியை விட்டு விலகிச் சுவரிற் சேர்த்து வைக்கப்பட்டிருந்த படைக்கலத்தைத் தன் கையிலெடுத்துக் கொண்டு அதனுல் அவன் மார்பிற்குக் லக்ஷியம் வைத்தாள்.

உன்னுயிர் மீதுனக் காசையுண்டெனில் என் கிட்டவராதே. வந்தாற் செத்தாய். இன்றிரவில் பட்டணத்திற்குள் போகவேண்டு மென்பது என்கோட்பாடு. நகர்சோதனைக்காரர் பவனிவருதற்கின்னும் இரண்டு நாழிகைப்பொழுது தானிருக்கின்றது. அதற்குள் நானும் திரும்ப இங்கு வந்து விடுவேன். இதனுல் உனக்கு நஷ்டம் ஒன்று முண்டாக வேண்டாம். இதோ இத்தொகையை அதற்குக் கைம்மாருக வைத்துக்கொள். எப்படியாவது நானின்று நகரிற்குள் போய் வராமலிருக்க மாட்டேன். மரியாதையாய்க் கதவைத் திறந்து என்னை வெளியே விடு" என்ருள். இவ்வனம் பேசிய பொழுது அவள் கண்கள் பெண்மைக் குணத்தை நீத்துப் பேராண்மைக் குணத்தைக் கொண்டன வென்றே கூறவேண்டும்

சேவகன் படைக்கலத்துக் கெட்டாத தூரத்திலங்கு மிங்கு மிக்க பரபரப்புடன் போவான் வருவான் நிற்பான் இருப்பான்; ஆயினு மவள் கிட்ட வரத்துணிந்திலன். இளவரசியோ தான் நின்ற நிலையை விட்டுப் பேராமல் மலைபோல் நின்று கொண்டு அவனைக் கிட்டவர வொட்டாமல் விலக்கி வைத்தனள். "இளவரசி, நான் கதவைத் திறக்கமாட்டேன்; என்னுடைய படையை என் கையிற் கொடும்" என்ருன் சேவகன்.

"ஆனால் உன்னைக் குத்திக் கீழேவீழ்த்தி விட்டு நானிந்த நிமிஷம் நகரிபிற் போகிறேன் பார்" என்று கூறிவிட்டுத் திடீரென் றவன் மேற் படையுடன் பாய அவன் நடுங்கிப்போய் முழங்காலிட்டுக் கீழே யிருந்து அவனை நோக்கி, "நான் கதவைத்திறந்து தருகிறேன், சொன்னபடி இரண்டு நாழிகைக்கு ளிங்கு வந்து விட நீரிசைய வேண்டும்" என்றான்.

"நானப்படிச் செய்வதாய் முன்னமே சொல்லியாயிற்றே. இன்றோடிஃது நிற்பதன்று. என்றைக் கெல்லாம் எனக்குத் தெருவீதியிற் போய் வரவேண்டுமென்ற எண்ணம் உண்டாகுமோ அன்றைக் கெல்லா மிப்படியே நான் செய்வேன். என்னை வேண்டாமென்று தடுக்க யார்க்கு மாற்றமில்லை யென்றறிந்துகொள். விரைவிற் கதவைத்திற" என்றாள்.

மெதுவாய்ப் படைச் சேவகன் இருக்கை விட்டெழுந்து கதவின் கிட்டப் போய் நின்றுகொண்டு அங்கு மிங்கும் பார்த்துக் கொண்டே மெல்லக் கதவைத் திறந்தனன். இளவரசி அதன் வழியாய் மிகக் கவனத்துடன் அவனுக்குப் புறங்காட்டிக் கொண்டு போனால் தனக் கபாயம் வந்து விடுமெனக்கருதிச் சேவகனைப் பார்த்துக் கொண்டே பின்னிட்டு நடந்து கையுமாயுதமுமாய்க் கோட்டைச் சுவரைக்கடந்து புறத்தாயினள்.

தெருவிற்குள் புகுதலும் அவ்வாயிலிலிருந்த கற்படியில் தன் கையிலிருந்த ஆயுதத்தை எறிந்து விட்டுத் தன் னுடையைச் சேர்த்து இறுகக் கட்டிக்கொண்டு விராற்பாய்ந்தாற் போல் அதிவேகமாய்ச் சென்றனள். நள்ளிருளாயிருந்தமையால் சேவகன் கண்ணுக்கு அவள் எத்திசை நோக்கிச் சென்றனள் என்பது போலும் தெரிய இடமின்றாயிற்று. தலையை யாட்டிக் கொண்டு அச்சேவகன் சிறிது நேரம் உற்றுப்பார்த்தும் அவனுக் கொன்றுங் காணவில்லை. பின்னர் அவன் கல்லில் எறியப்பட்டிருந்த ஆயுதத்தைக் கையிலெடுத்துக் கொண்டு உள்ளே சென்று கதவை முன்போலடைத்துத் தாழ்க்கோலு மிட்டனன்.

செல்வியாள் ஒருவர் கண்ணுக்கு மிலக்காகாமல் நகர்ப்புறமுழுதுஞ் சஞ்சரித்தனள்; ஆங்காங்கு நகர வாசிகளங்கு மிங்கும் போய் வருவதைக் காணுகையில் தன்னை யின்னாரென் றவரறிந்து கொள்ளாதபடி நிழல்களுள்ள விடங்களின் வழி மறைந்தும் பதுங்கியும் சென்றாள். இப்படி மூன்றிரவு தொடர்ந்து தெருவிலெல்லாம் புகுந்து பார்த்து வந்தனள். தன்னூரில் முன்னிருந்த நிலைமை முற்றிலு மாறிப் பல குடிகள் வருந்துவதையும் அவர் திண்ணைகள் தோறும் கூடி இருந்து தாம்படுந் துயரங்களையும் தமக்கு நேரிட்டிருக்கும் கஷ்டங்களையும் பற்றி அவருரைத்து வருவதையுங் கேட்டு மன மிகப் புழுங்கினள்.

புத்தகக் குறிப்புகள்.

"இராக்ஷணிய யாத்திரிகன்":— இப்பெயரிய புத்தகமொன்று நம் பார்வைக் கனுப்பப்பட்டதைக் கண்டு மகிழ்கின்றோம். இதில் கடவுள் வணக்கமும் மூன்று பதிகங்களும் வாழ்த்தும் அடங்கியிருக்கின்றன. இப்பதிகங்கள் மூவர் தேவாரத்தின் போக்கினை யுடைத்தாய் ஆசிரியர் தமது வழிபடுகடவுள் (கிறிஸ்து) மேல்வைத்த பக்தி யின்திறனை விளக்கிச் சொற்சுவையும் பொருணயமு மிக்குடையன. புராதனப் பண்களை யமைத்துப் பாடியிருத்தலின் இசைப் பொருத்தமுமுடையன. இச்சிறு நூல் இவரது தமிழ்க் கல்வியின் ஆழத்தையும் தேவாரம், புராணங்கள் முதலிய பரசமய நூல்களிலுள்ள விசேஷப் பயிற்சியையும் நன்குவிளக்குகின்றது. மூவர் தேவாரங்களையும், புராணங்களையும் சிறந்த இலக்கியநூல்களாக மாத்திரமேயன்றித் தமிழ்மறையாகக்கொண்டொழுகும் சைவர் இவ்வாறு சிரத்தையுடன் பயில்வரேல் அளவிறந்த நன்மை விளையுமென்பதிலையமியாது ?

ஜீவகாருண்யபோதம்:- என்னும் ஓர் பிரசங்கம் அத்திக்குடி சிவஞானப்பிரகாசசபையாரால் புத்தகருபமாய் வெளியிடப்பட்டிருக்கிறது. நம் தேயத்தில் மதசம்பந்தமான ஊக்கம் மிகவும் குன்றியிருக்கும் இக்காலத்தில் இங்ஙனம் ஓர் சபை தாபிக்கப்பட்டு நடப்பது சைவருக்கும் ஏனையோருக்கும் பெருமையே. இச்சபையின் நோக்கங்களிற் பிரதானமானவை மதவிஷயங்களைக் குறித்துப் பிரசங்கம் செய்தல், அவற்றைப் புத்தகங்களாக வெளியிடுதல் முதலிய தற்காலம் வெகு அவசியமான காரியங்களாகின்றன.

ஜீவ காருண்யத்தை விளக்கும் இப்புத்தகம் பொதுஜனங்களுக்குபகாரப் படத்தக்க விதத்தில் விஷயத்தைச் சுருக்கச் சொல்லு மியல்பினையுடையது. இந்நூலின் உபோத்காதமோ எழுதிய வரது சைவ சமயநூல்களாராய்ச்சித் திறனையும் பக்தியையும் நன்கு விளக்குவதேனும் மிகவி

ந்து நூல் முதலிய விஷயத்துடன் பொருத்திக் காட்டக் கிடந்ததன்றிப் பாயிர வுருப்பா யமைந்து அவ்விஷயத்தை விளக்குவதன்று.

இனி இப்புத்தகம் வெளியிடுதற்கு வேண்டிய பொருளுதவி செய்த விருது பட்டி கனம். சு. பே. ஐயநாடாரவர்களது வள்ளன்மை தற்காலத்தில் சோம்பேறிகளையும் அவாது மற்றைத் தீக்குணங்களையும் பெருகச் செய்யும் மற்றைச் சில பிரபுக்களின் கொடைபோலாது நமது நாட்டிற்கு இப்பொழுது ஆவசியகப்பட்ட இச்சிறந்த தருமத்தை நடைபெறச் செய்ய முற்பட்டதால் மிக்க புகழுக்குரியதே.

இப்புத்தகத்தை சைவசமயிகள் மட்டும் விலையின்றிப் பெறலாம்.

சுபத்ரார்ச்சுநம் :—இஃது திருவனந்தபுரம், மஹாராஜா சம்ஸ்கிருத சர்வகலாசாலைப் போதகர் பிரம்ம ஸ்ரீ. கேசவசாஸ்திரிகளால் சம்ஸ்கிருதத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. இம்மொழி பெயர்ப்பு வடமொழி நாடக இலக்கணம் முழுதும் ஒருங்கே அமையப் பெற்று முதனூலின் சொல், பொருள், கருத்துகளில் சிறிதேனும் வேறுபாடின்றி அமைந்துள்ளது. இப்புத்தகத்தை வாசிப்போரிக்கு இஃது ஒரு மொழி பெயர்ப்பென்பது சிறிதும் புலப்படாது, வடமொழியில் ஆக்கப்பட்ட பழய நாடக நூலாகவே மதிக்கத்தக்கது. இந்நூலை முதலில் மலையாள பாஷையில் தாமே கற்பித்துச் செய்த பெண் மணியாகிய ஸ்ரீமதி இக்காவு அம்மையின் திறமைக்கு இந்நாடகத்தில் மற்றைச் சில நூல்களிற் போன்று, படிக்கும் இளம்பிராயத்தவர்க்குத் தீங்கு விளைக்கத்தக்க வர்ணனைகளின்றி யிருப்பதும் காளிதாசர் முதலிய மகா கவிகளால் இயற்றப்பட்ட பழய நாடகங்கள் மலிந்துள்ள வடமொழியில் மிக்குப் பயின்ற சாஸ்திரிகள் இந்நூலை அம்மொழியில் பெயர்த்திருப்பதுமே தக்க சான்றாகும். நம் இந்திய நாட்டுப் பெண்பாலாரில் ஒருவர் இங்ஙனம் ஒரு நூலியற்றியது அவர்க்கேயன்றி நாடு முழுவதிற்கும் பெருமை விளைக்கின்றது. இத்தகைய நூல் சர்வகலாசாலைப் பரீக்ஷைகளுக்குப் படிக்கும் மாணாக்கருக்குப் பாடமாக ஏற்படுத்திப் பயிற்றுவிக்கத்தக்கது.

சமாசாரக் குறிப்புகள்.

புதிய நாணயங்கள் :— திருவாங்கூர் துரைத்தனத்தாரால் திகழும் ஆவணி மீ 1-ந் தேதி முதல் நான்கு புதிய நாணயங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. (1) ஏகதேசம் பிரிட்டிஷ் இரண்டணாவைப்போல் இரண்டு சக்கர வெள்ளி நாணயம். (2) ஷை கால் அணாவைப்போன்ற ஒரு சக்கரச் செம்பு நாணயம். (3) அதிற் சிறியதாய் அரைச் சக்கரம். (4) அதிற் சிறியதாய் கால் சக்கரம். இந்த நாணயங்களின் ஒரு புறத்தில் சங்க முத்திரையும் மற்றொரு புறத்தில் R. V. என்ற எழுத்துக்களும், நாணயத்தின் பெயர் இங்கிலீஷிலும் மலையாளத்திலும் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்நாணயங்கள் வழங்கக் கிடைத்ததில் ஜனங்களுக்குள்ள சந்தோஷத்திற்களவில்லை. பழக்கத்திற்கு சௌகரியமான நாணயமென்பதில் தடையேதுமில்லை. ஆனால் எவ்வளவோ நாகரீகமிக்க இக்காலநிலைக்கேற்ப உண்டாக்கிய நாணயங்களில் வருடம் பதிப்பியாத குறை ஒரு பெருங்குறையென்றே சொல்வோம். இந்நாணயங்கள் பரவ பழய சக்கரம் நின்று விடுமானால் கள்ள நாணயமடிக்கும் பொற்கொல்லர் பாடு திண்டாட்டம் தான்.

◉◉◉

திருவாங்கூர் அஞ்சல் :— போஸ்டாபீஸ் நாளுக்கு நாள் இந்நாட்டில் பல விடங்களிலும் மிகப் பரவி வருகின்றது. எனினும் அது, அஞ்சலபிவிருத்தியைத் தடை செய்யவில்லை. குறைந்த கூலியாலும் பிறவாற்றானும் ஜனங்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் அஞ்சலில் ஒருங்கே நிறைந்திருக்கின்றன. இந்த டிபார்ட்மென்டிலொரு ஆவணி மீ 1-ந் தேதி முதல் மணி யார்டரும் ஏற்படுத்தப்பட்டு நடைபெறுகின்றது.

◉◉◉

ஒரு புகைக்கப்பல் முழ்கியது :— ஜூலாண்டா என்னும் நீராவி மரக்கலம் ஒன்று 65 பிரயாணிகளுடன் சென்ற மீ 15-உ இரவு யுகான் என்னுமிடத்திலிருந்து கடல் மார்க்கமாய் கனாடியாவுக்குப் போகும்போது கடலில் முழ்கியதாம். அதில் கவர்னர் ரஸ் என்பவர் மனைவி, குமாரத்தி சகோதரபுத்திரன் ஆகிய மூவரும் பிரயாணிகளாக இருந்தனர்களாம்.

நற்சாக்ஷிப் பத்திரம்.

"அறிவு விளக்கம்":—இந்த நவீன தமிழ் நடைகொண்டு தனது பெயர் விளக்கத்தை நன்கு விளக்குகின்றது. இப்பத்திரிகைக்கு விஷயதானம் செய்யும் அறிஞர் பலராக இருத்தலின் இதன் அங்கம் அறிவு விளக்கத்திற் கேதுவாகும் லௌகிக, வைதிக ஞான பூஷணாலங்கிருதமுடையதாக விளங்குவது நோக்கி மகிழ்ந்தனம். பத்திராசிரியர் சிவஞானதேசிகராக இருத்தலின், அறிவு விளக்கத்தின் கட்பெறப்படும் சிவஞானதானஞ் செய்யும் வள்ளல் இவரே யென்பதைக் கரதலாமலகம் போலக் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் பத்திரிகை விளக்குவது வியப்பைத் தருகின்றது.—பெங்களூர்த் தாரகை.

"அறிவு விளக்கம்":—இப்பெயர் பூண்ட மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகையின் முதற் புத்தகம் 7-வது லக்கத்தைப் பார்வையிட்டதில் இது நம் தமிழ் நாட்டில் மிக்க அருமையான செந்தமிழ் நடைபெற்ற மாதாந்தப் பத்திரிகையாய்த் தமிழறிஞர் மனமுவந்து நாடத்தகுவனவாகிய விஷயங்களால் அறிவைவிளக்கும் பேறுடைய தென்போம். இதன் பத்திராதிபராகிய வள்ளல். சோ. சிவஞானதேசிகர் நாகர்கோவில் விக்டோரியா அச்சுக்கூடத்தில் இதைப் பதிப்பித்துத் திருவனந்தபுரத்தில் வெளியிட்டு வரும் நன்மைக்காக நந்தமிழ் நாடு வந்தனம் புரிவதாக.—சுதேசமித்திரன்.

Printed at the Victoria Press ("திருவிதாங்கூர் அபிமானி" ஆபீஸ்) Nagercoil.